இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**மக்களிடையே அமைதி, நம்பிக்கை மற்றும் நட்புக்கான வலுவான வேண்டுகோளுடன் புத்தாண்டைத் தொடங்கிய திருத்தந்தை, "மோதல் மற்றும் பிரிவினையைத் தாண்டி உலகம் முன்னேற வேண்டும்" என்று வலியுறுத்தினார்.**

# அமைதியையும் நம்பிக்கையையும் புதுப்பித்துக் கொள்ளுங்கள்!



"நன்மைகள் நிறைந்த படைப்பாளரான கடவுள், மரியாவின் இதயத்தையும் நம் இதயங்களையும் எப்போதும் அறிந்திருக்கிறார்" என்று கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

ஜனவரி 01, வியாழக்கிழமையன்று, 'கன்னி மரியா கடவுளின் தாய்' என்ற பெருவிழாவைச் சிறப்பித்த வேளை, வத்திக்கான் புனித பேதுரு பேராலயம் வளாகத்தில் கூடியிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானத் திருப்பயணிகளுக்கு வழங்கிய சிறப்பு நண்பகல் மூவேளை இறைவேண்டல் உரையில் இவ்வாறு மொழிந்தார் திருத்தந்தை.

## பிரிவினையைத் தாண்டி உலகம் முன்னேற வேண்டும்

மக்களிடையே அமைதி, நம்பிக்கை மற்றும் நட்புக்கான வலுவான வேண்டுகோளுடன் புத்தாண்டைத் தொடங்கிய திருத்தந்தை, "மோதல் மற்றும் பிரிவினையைத் தாண்டி உலகம் முன்னேற வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

"மனிதகுலத்தின் நன்மைக்கான உண்மையான விருப்பத்துடன் இருந்தால் மட்டுமே பழைய ஆண்டிலிருந்து புதிய ஆண்டிற்குள் நுழைவது அர்த்தமுள்ளதாக இருக்கும்" என்று எடுத்துக்காட்டினார்.

## நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள்

நிறைவடைந்து வரும் யூபிலி ஆண்டைக் குறித்துச் சிந்தித்த திருத்தந்தை, விசுவாசிகள் தங்கள் இதயங்களை கடவுளிடம் திருப்புவதன் வழியாக, நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுமாறும், தவறுகளை மன்னிப்பாகவும், துன்பங்களை ஆறுதலாகவும் மாற்றுமாறும் ஊக்குவித்தார்.

இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்டு, தனது கருத்துக்களைப் பகிர்ந்துக்கொண்ட திருத்தந்தை, "மனச்சான்றுகளை ஒளிரச் செய்து, ஒவ்வொரு நபரையும் வரவேற்கும் எதிர்காலத்தை உருவாக்க உதவும் வரலாற்றில் நுழையும் மீட்பர்" என்று அவரை விவரித்தார்.

## கிறிஸ்துவின் உடனிருப்பை அனுபவித்த மரியா

கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் கிறிஸ்துவின் உடனிருத்தலை முதன்முதலில் அனுபவித்த அன்னையாக மரியாவை விவரித்ததன் வழியாக, பிறக்காத ஒவ்வொரு குழந்தையிலும் பிரதிபலிக்கும் மனித வாழ்க்கையின் மாண்பை எடுத்துக்காட்டினார் திருத்தந்தை.

குறிப்பாக, போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளிலும், வன்முறை அல்லது வலியால் காயமடைந்த குடும்பங்களிலும் அமைதி நிலவிட இறைவேண்டல் செய்யுமாறு விசுவாசிகள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

## நம்பிக்கையின் நீடித்த ஆதாரம் கிறிஸ்து

இறுதியாக, உலகிற்கு நம்பிக்கையின் நீடித்த ஆதாரமாக கிறிஸ்து தொடர்ந்து இருக்கிறார் என்ற உறுதியை வெளிப்படுத்திய திருத்தந்தை, தனது இறைவேண்டலை கடவுளின் தாயாம் அன்னை மரியாவின் பரிந்துரையில் ஒப்படைத்து தனது சிறப்பு நண்பகல் மூவேளை செப உரையை நிறைவு செய்தார் திருத்தந்தை.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# 30 இலட்சத்திற்கும் அதிகமான விசுவாசிகள் வத்திக்கானுக்கு வருகை!

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவரது நிகழ்வுகளுக்கு அதிக அளவில் விசுவாசிகள் வருகைப் புரிந்த்துள்ளனர்.

2025-ஆம் ஆண்டில், வத்திக்கானில் 31,70,000-க்கும் அதிகமான விசுவாசிகள் திருத்தந்தையின் கூட்டங்கள் மற்றும் வழிபாட்டு விழாக்களில் கலந்து கொண்டதாக, திருத்தந்தையின் இல்லத் தலைமைப் பணியகம் வெளியிட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை திருப்பயணிகளின் வருகை குறைவாக இருந்தது, அதாவது, 2,62,820 பேர் பதிவு செய்யப்பட்டனர் என்றும், இதில் திருத்தந்தையின் பொது மற்றும் யூபிலி மறைக்கல்வி உரைக் கூட்டத்தில் 60,500 பேரும், சிறப்புச் சந்திப்புக் கூட்டங்களில் 10,320 பேரும், திருப்பலிகளில் 62,000 பேரும், மூவேளை இறைவேண்டல் உரையில் கலந்து கொண்ட 1,30,000 பேரும் அடங்குவர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 8, வியாழக்கிழமையன்று, திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏறக்குறைய 30,00,000 விசுவாசிகள் வத்திக்கான் நிகழ்வுகளில் பங்கேற்றனர் என்றும், திருத்தந்தையின் 36 பொது மற்றும் சிறப்பு யூபிலி விழா மறைக்கல்வி உரைகளில் 10,69,000 பேர் கலந்து கொண்டதாகவும், சிறப்புச் சந்திப்புக் கூட்டங்களில் 1,48,300 பேர் கலந்து கொண்டதாகவும், வழிபாட்டுச் சடங்குகளில் 7,96,500 பேர் கலந்து கொண்டதாகவும், ஞாயிறு மூவேளை இறைவேண்டல் உரைகளில் 9,00,000 பேர் கலந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளது அதன் புள்ளிவிபரங்கள்.

டிசம்பர் மாதத்தில் அதிகபட்சமாக 2,50,000 பேர் திருத்தந்தையின் ஞாயிறு மூவேளை இறைவேண்டல் உரைகளில் பங்கேற்றனர் என்றும், அதேவேளையில், அக்டோபர் மாதத்தில் இடம்பெற்ற வழிபாட்டு விழாக்களிலும் (ஏறக்குறைய 2,00,000 பேர்) மற்றும் பொது மற்றும் யூபிலி விழா மறைக்கல்வி உரைகளில் (ஏறத்தாழ 2,95,000பேர்) பங்கேற்ற திருப்பயணிகளின் வரவு உச்சம் தொட்டதாகவும் பதிவாகியுள்ளது.

மேலும் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து வந்த ஆண்டில், அவரது நிகழ்வுகளுக்கு அதிக அளவில் விசுவாசிகள் வருகைபுரிந்துள்ளதை இந்த எண்கள் எடுத்துக்காட்டுகின்றன அதன் புள்ளிவிபரங்கள் குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# ஆயுதங்களற்ற, ஆயுதங்களைக் களைந்த அமைதிக்கு திருத்தந்தை அழைப்பு!

திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், தனது மறையுரையில் அன்னை மரியாவின் தாய்மைப் பண்புகள் குறித்தும், உலக அமைதி நாள் குறித்தும் தனது சிந்தனைகளை விசுவாசிகளுடன் பகிர்ந்துகொண்டார்.

"கத்தோலிக்கர்களும் நல்லெண்ணம் கொண்ட மக்களும் பணிவு, சுதந்திரம் மற்றும் இரக்கத்தில் வேரூன்றிய அமைதியின் நோக்கத்தைத் தழுவ வேண்டும்" என்று அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

ஜனவரி 1, வியாழக்கிழமையன்று, வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலில் சிறப்பிக்கப்பட்ட, 'கன்னி மரியா கடவுளின் தாய்' பெருவிழா மற்றும் 59-வது உலக அமைதி நாள் திருப்பலியில் வழங்கிய மறையுரையில் இவ்வாறு கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.

புத்தாண்டின் விடியலில், கடவுளின் தாராள அன்பு, இரக்கம் மற்றும் பதிலளிக்கும் நமது சுதந்திரத்தால், நம் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு நாளும் ஒரு புதிய வாழ்க்கையின் தொடக்கமாக இருக்க முடியும் என்பதை இன்றைய வழிபாட்டு முறை நமக்கு நினைவூட்டுகிறது என்றும் குறிப்பிட்டார்.

## கடவுள் அளித்த அமைதி எனும் கொடை

புதிய ஆண்டின் தொடக்கத்தில் வழிபாட்டிற்குக் கொடுக்கப்பட்ட எண்ணிக்கை நூலில் கூறப்படும் ஆசீர்வாதங்கள் பற்றி தனது விவிலிய சிந்தனைகளை வெளிப்படுத்திய திருத்தந்தை, விடுதலைப் பெற்ற மக்களுக்கு கடவுள் அளித்த கொடை அமைதி என்பதை எடுத்துக்காட்டினார்.

## ஒரு திறந்த பயணமாகக் காணுங்கள்

கடவுளின் இரக்கம் மற்றும் மனித சுதந்திரத்தால் சாத்தியமான "ஒரு திறந்த பயணமாக" புத்தாண்டைக் கண்டுகொள்வதற்கு விசுவாசிகளை அழைத்த திருத்தந்தை, கடவுளின் நெருக்கத்திலும் நன்மையிலும் நம்பிக்கையுடன் வாழும்போது ஒவ்வொரு நாளும் ஒரு புதிய தொடக்கமாக இருக்கும் என்று கூறினார்.

## வலுவின்மையில் வெளிப்பட்ட கடவுள்

மரியாவின் தெய்வீகத் தாய்மையின் பெருவிழாக் குறித்துச் சிந்தித்த திருத்தந்தை, கடவுளுக்கு "ஆம்" என்று அவர் கூறியதன் வழியாக, கடவுளின் இரக்கத்திற்கு மனித முகத்தைக் கொடுப்பதில் மரியாவின் பங்களிப்பை வலியுறுத்தியதுடன், இயேசுவில், கடவுள் தன்னை அதிகாரம் அல்லது வலிமையால் அல்ல, மாறாக வலுவின்மை மற்றும் அன்பின் மூலம் வெளிப்படுத்துகிறார் என்று மொழிந்தார்.

## ஆயுதங்களற்ற மற்றும் ஆயுதங்களைக் களைந்த கடவுள்

உலக அமைதி நாளை நினைவுகூர்ந்து கடவுளை ஆயுதங்களற்றவராகவும் ஆயுதங்களைக் களைந்தவராகவும் விவரித்த திருத்தந்தை, கிறிஸ்துவை பாதுகாப்பற்ற புதிதாகப் பிறந்த குழந்தையுடன் ஒப்பிட்டு, உலகம் வன்முறை, தீர்ப்பு அல்லது அடக்குமுறையால் காப்பாற்றப்படவில்லை, மாறாக புரிதல், மன்னிப்பு, விடுதலை மற்றும் வரவேற்பால் காப்பாற்றப்படுகிறது என்று கற்பிக்கிறார் என்றும் எடுத்துக்காட்டினார்.

## ஆயுதமற்ற அன்பின் முன்மாதிரி மரியா

இந்த "ஆயுதமற்ற" அன்பின் ஒரு முன்மாதிரியாக மரியாவை எடுத்துக்காட்டிய திருத்தந்தை, அவர் தனது வாழ்க்கையை கடவுளுக்கு சுதந்திரமாக வழங்கினார், எதிர்பார்ப்புகளையும் ஆறுதல்களையும் துறந்தார், பெத்லகேமிலிருந்து சிலுவை மற்றும் உயிர்த்தெழுதல் வரை தனது மகனைப் பணிவுடன் பின்பற்றினார் என்பதைக் குறிப்பிட்டார்.

## புதிதாய்ப் புறப்படுங்கள்

புனித அகுஸ்தினார் மற்றும் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் இருவரையும் மேற்கோள் காட்டி, மனுவுருவெடுத்தலின் பணிவு விசுவாசிகளை நம்பிக்கை மற்றும் அமைதியின் சாட்சிகளாக மாற்றுகிறது என்பதை நினைவு கூர்ந்த திருத்தந்தை, கிறிஸ்துவுடனான சந்திப்பு தங்கள் வாழ்க்கையையும் கலாச்சாரங்களையும் புதுப்பிக்க அனுமதிக்குமாறு கிறிஸ்தவர்களை ஊக்குவித்தார்.

எதிர்நோக்கின் யூபிலி ஆண்டு நிறைவடையும் வேளையில், இயேசுவின் பிறப்பு விழாவை உண்மையான அமைதி மற்றும் ஆசீர்வாதத்தின் இடமாக அணுகுமாறு விசுவாசிகளுக்கு அழைப்பு விடுத்த திருத்தந்தை, வரும் ஆண்டில், "கடவுளை மாட்சிமைப்படுத்திப் புகழ்ந்து", இரக்கம் மற்றும் அமைதியால் வடிவமைக்கப்பட்ட வாழ்க்கை மூலம் நற்செய்திக்குச் சான்று பகர்ந்து, புதிதாகப் புறப்பட வேண்டும் என்று விசுவாசிகளை வலியுறுத்தி தனது மறையுரையை நிறைவு செய்தார் திருத்தந்தை.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# நம்பிக்கையின் யூபிலி ஆண்டு நிறைவு

2026 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் தேதி, ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா அன்று, திருத்தந்தை லியோ அவர்கள் புனித பேதுரு பெருங்கோவிலின் புனிதக் கதவை (Holy Door) முறைப்படி மூடினார். இதன் மூலம், 2024 கிறிஸ்மஸ் முன்னிரவில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட 2025-ஆம் புனித ஆண்டு, நிறைவு பெற்றது. உலகளாவிய கொண்டாட்டம் ரோமில் ஜனவரி மாதம் நிறைவடைந்தாலும், மலேசியாவில் உள்ள மறைமாவட்டங்களில் இந்த யூபிலி கொண்டாட்டங்கள் முன்னதாகவே டிசம்பர் 28 அன்றே நிறைவடைந்தன. இது அருள், திருப்பயணம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட விசுவாசத்தின் ஓர் ஆண்டாக அமைந்தது.



### கோலாலம்பூர் உயர்மறைமாவட்டம்

புனித யோவான் நற்செய்தியாளர் பேராலயத்தில், பேராயர் ஜூலியன் லியோ அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருப்பலியுடன் கோலாலம்பூர் உயர்மறைமாவட்டம் நம்பிக்கையின் யூபிலி ஆண்டை நிறைவு செய்தது. இத்திருப்பலியில் வத்திக்கான் தூதர் பேராயர் வோஜ்சிக் ஜலுஸ்கி, ஓய்வுபெற்ற பேராயர் மர்பி பாக்கியம், மற்றும் மறைமாவட்டத்தின் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தனது மறையுரையில், விசுவாசிகள் தொடர்ந்து "நம்பிக்கையின் திருப்பயணிகளாக" (Pilgrims of Hope) இருக்க வேண்டும் என்று பேராயர் ஜூலியன் அழைப்பு விடுத்தார். அன்பு, இரக்கம் மற்றும் சேவை மூலம், குறிப்பாக ஒதுக்கப்பட்டவர்கள், புலம்பெயர்ந்தோர், அகதிகள் மற்றும் நலிவுற்றவர்களுக்கு மத்தியில் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகத் திகழ வேண்டும் என்று அவர் கூறினார். கத்தோலிக்கர்களின் உண்மையான வீடு விண்ணகம் என்பதையும், துன்பமும் நிச்சயமற்ற தன்மையும் நிறைந்த உலகில் கிறிஸ்துவின் ஒளியைச் சுமக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதையும் அவர் நினைவுபடுத்தினார்.

### பினாங்கு மறைமாவட்டம்

தூய ஆவி பேராலயத்தில், பினாங்கு ஆயர் கர்தினால் செபாஸ்டியன் பிரான்சிஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருப்பலியுடன் பினாங்கு மறைமாவட்டம் யூபிலி ஆண்டை நிறைவு செய்தது. கர்தினால் செபாஸ்டியன் தனது மறையுரையில், இந்த யூபிலி ஆண்டைத் தொடங்கியதற்காகவும், திருஅவையை எப்போதும் "இயக்கத்தில்" (on the move) இருக்குமாறு அழைத்ததற்காகவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். நம்பிக்கையின் திருப்பயணிகளாக இருப்பது என்பது, நிச்சயமற்ற காலங்களிலும் கூட, நன்றியுணர்வு, விசுவாசம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் கடவுள் நம் இதயங்களை மாற்ற அனுமதிப்பதாகும் என்று அவர் விசுவாசிகளுக்கு நினைவூட்டினார்.


கிறிஸ்தவ நம்பிக்கை என்பது வெறும் உலகப்பார்வை சார்ந்த நம்பிக்கை (optimism) அல்ல, மாறாகக் கிறிஸ்துவில்



வேரூன்றிய ஒரு தெய்வீக நற்பண்பு (divine virtue) என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், 2026-ஆம் ஆண்டு சிபுவில் நடைபெறவுள்ள மலேசிய மேய்ப்புப்பணி மாநாட்டை (MPC 2026) எதிர்நோக்குமாறு அவர் விசுவாசிகளை ஊக்குவித்தார். துடிப்பான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நற்செய்திப் பணியில் ஆர்வமுள்ள திருஅவைக்கான விசுவாசம், தேர்ந்து தெளிதல் மற்றும் ஒத்துழைப்பின் தொடர் பயணமாக இது இருக்கும் என்றார்.

### மலாக்கா ஜொகூர் மறைமாவட்டம்



ஜொகூர் பாருவில் உள்ள இயேசுவின் திருஇருதய பேராலயத்தில், ஆயர் பெர்னார்ட் பால் தலைமையில் நடைபெற்ற ஆடம்பரத் திருப்பலியுடன் மலாக்கா ஜொகூர் மறைமாவட்டம் யூபிலி ஆண்டை நிறைவு செய்தது. "நம்பிக்கையின் திருப்பயணிகளாக" தொடர்ந்து வாழுமாறு விசுவாசிகளை அவர் அழைத்தார்.

திருப்பயணத்தின் ஆன்மீக அர்த்தத்தை எடுத்துரைத்த ஆயர் பெர்னார்ட், வாழ்க்கையே கடவுளை நோக்கிய ஒரு பயணம் என்பதை வலியுறுத்தினார். பொறுமை, ஒற்றுமை, இரக்கம் மற்றும் கடவுளின் வாக்குறுதிகள் மீது புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை ஆகியவற்றைக் கொண்டிருக்குமாறு அவர் ஊக்கப்படுத்தினார். அமைதிக்கான அழைப்புகள், நலிவுற்றோர் மீதான அக்கறை, ஏழைகளுக்கான நீதி, மற்றும் அருட்சாதனங்கள் மற்றும் புனிதத்துவத்தின் மீதான புதுப்பிக்கப்பட்ட கவனம் போன்ற யூபிலி ஆண்டில் காணப்பட்ட நம்பிக்கையின் அடையாளங்களையும் அவர் சுட்டிக்காட்டினார்.

# தமிழ் மறைக்கல்வி ஆண்டு நிறைவு மற்றும் கிறிஸ்மஸ் விழா



கூலிம்: கடந்த நவம்பர் 28-ஆம் நாளன்று, கூலிம், இயேசுவின் திருஇருதய ஆலயத்தில் தமிழ் மறைக்கல்வி ஆண்டு நிறைவு விழாவும், கிறிஸ்மஸ் கொண்டாட்டமும் மிகவும் மகிழ்ச்சியாக நடைப்பெற்றன. இதில் 80 மாணவர்களும், மறைக்கல்வி ஆசிரியர்களும் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

காலை 9.30 மணியளவில் இறைவேண்டல் மற்றும் ஆராதனையுடன் நிகழ்வு இனிதே தொடங்கியது. தொடர்ந்து அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது. காலை அமர்வின் போது, ஒவ்வொரு மறைக்கல்வி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும் மிகத் துடிப்புடன் பங்கேற்றனர். குறிப்பாக, பாலர் பள்ளி (Pre-school) முதல் ஆறாம் வகுப்பு வரையிலான மாணவர்கள், உற்சாகமான பாடல்களையும் நடனங்களையும் மேடையேற்றி அனைவரையும் மகிழ்வித்தனர். மாணவர்களிடம் மறைந்திருந்த பல்வேறு திறமைகளைக் காண்பது உண்மையிலேயே மிக அருமையாக இருந்தது.

ஏற்பாட்டுக் குழுவினர் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாகப் பரிசுகளுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். சிறந்த வருகைப்பதிவு (Best Attendance) மற்றும் சிறந்த கலை நிகழ்ச்சிகளுக்காக மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், கலந்து கொண்ட மற்ற அனைத்து மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. மறைக்கல்வி ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டி அவர்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வின் நிறைவாக, பங்கேற்ற குழந்தைகள் அனைவருக்கும் ஏற்பாட்டுக் குழுவினர் சிற்றுண்டி வழங்கினர். அனைவரும் மகிழ்ச்சியோடும், நன்றியோடும் இல்லம் திரும்பினர்.

இறுதியாக, மறைக்கல்வி ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி ஜேன் சந்தனசாமி அவர்கள், இந்த விழா இவ்வளவு சிறப்பாக நடைபெற உழைத்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

# ஆண்டவரின் திருமுழுக்கு விழா

### திருமுழுக்கு - அழிக்க முடியாத ஆன்மீக முத்திரை

திருஅவை இன்று இயேசுவின் திருமுழுக்கு விழாவைக் கொண்டாடுகிறது. திருமுழுக்கு நம்மை இறைவனின் பிள்ளைகளாகவும், தூய ஆவியாரின் வல்லமையைப் பெறுபவராகவும் மாற்றுகிறது என்பது நாம் அறிந்த உண்மை. பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களில் இறுதியானவர் திருமுழுக்கு யோவான். மேசியாவுக்கு உடனடியாக வழியைத் தயார் செய்யும் பணிக்காக இவர் கடவுளால் அனுப்பப்பட்டவர். இன்றைய ஆண்டவரின் திருமுழுக்கு விழாவானது பழைய சட்டத்திலிருந்து புதிய சட்டத்திற்கு ஒரு முக்கிய மாற்றத்தைக் குறிக்கும் ஒரு நிகழ்வாகவும் உள்ளது. இயேசுவின் திருமுழுக்கோடு பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களின் பணி முழுமையடைவதோடு, கடவுளின் புதிய அருளின் புதிய காலம் தொடங்குகிறதாக நாம் பொருள் கொள்ளலாம்.

இயேசு ஏன் திருமுழுக்குப் பெற வேண்டும் என்ற கேள்வி நம்மில் பலருக்கு தோன்றுவதுண்டு. அவர் பாவமற்றவராக இருந்தார், மனந்திரும்ப வேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை. ஆனாலும், இயேசு தம்முடைய தெய்வீக ஞானத்தில், தண்ணீரைப் தூய்மைப்படுத்த திருமுழுக்குப் பெறத் தேர்ந்தெடுத்தார், அதைத் தொடர்ந்து வரவிருக்கும் அனைவருக்கும் அருளின் வாசலைத் திறந்தார் என்று அறிகிறோம். நீரில் திருமுழுக்கு பெற்றதன் மூலம், இயேசு கடவுளுடனான புனித உறவு வாழ்வுக்கு மனுக்குலத்திற்கு ஒரு வழிமுறையை ஏற்படுத்தினார். ஆம், திருமுழுக்குப் பெறும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் கடவுளை அங்கே சந்தித்து, அவருடைய அருள் வாழ்க்கையில் பங்கு கொள்கிறார்கள் என்பதாகும்.

இன்று முதல், கிறிஸ்து பிறப்பு பெருவிழா என்ற இக்கரையிலிருந்து நாம் ஆண்டின் பொதுக்காலம் என்ற அக்கரைக்கு கடந்து செல்கின்றோம். நம்மைத் தண்ணீரில் இறக்கி அக்கரைக்குச் செல்ல அழைக்கும் விழாவே இயேசுவின் திருமுழுக்கு திருவிழா. இன்றைய நற்செய்தி வாசகம் (மத் 3:13-17) இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வை படம்பிடித்துக்காட்டுகிறது. திருமுழுக்கு பெறுமுன் இயேசு யோவானோடு உரையாடுகின்றார். 'நீரா என்னிடம் திருமுழுக்கு பெற வருகிறீர்?' என்று யோவான் தயக்கம் காட்ட, 'கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதே முறை' என்கிறார் இயேசு.

இதையே இன்றைய இரண்டாம் வாசகத்தில் (திப 10:34-38), கொர்னேலியுவின் இல்லத்தில் உரையாற்றுகின்ற பேதுரு, இயேசுவின் திருமுழுக்கு அனுபவத்தை, 'தூய ஆவியாரின் அருள்பொழிவு' என்று அழைப்பதோடு, 'கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து, எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றார்' என்று மொழிகின்றார்.

இன்றைய முதல் வாசகம் (எசா 42:1-4,6-7), ஊழியர் பாடல் என்றழைக்கப்படும் நான்கு பாடல்களில் முதன்மையான பாடலாக இருக்கிறது. இங்கே கடவுள் தான் தேர்ந்துகொண்ட இஸ்ரயேலை, தன்னுடைய இறைவாக்கினரை, தான் முன்மொழியும் மெசியாவை, 'இதோ! என் ஊழியர்' என அழைக்கின்றார்.

இன்று கிறிஸ்துவின் திருமுழுக்கைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, நாம் பெற்றத் திருமுழுக்கைக் கருத்தில் கொள்ள அழைக்கப்படுகிறோம். நம்மில் பெரும்பாலோர் குழந்தை பருவத்தில் திருமுழுக்குப் பெற்றோம். சிலர் அந்த நிகழ்வைப் புகைப்படங்களில் இன்று பார்க்கக்கூடும். மேலும் பலருக்கு அவ்வாய்ப்பு கிட்டாமலிருக்கலாம். மற்றவர்கள் வாழ்க்கையின் பிற்பகுதியில் திருமுழுக்குப் பெற்றிருக்கலாம்.

இன்று நமது திருமுழுக்கு எப்போது நிகழ்ந்தது என்பதைப் பொருட்படுத்தாமல், திருமுழுக்கின் விளைவுகள் குறித்து சிந்திப்பது சாலச் சிறந்தது. திருமுழுக்கு நம் வாழ்வில் ஒரு முறை மட்டுமே நிகழ்கிறது. அது நம் ஆன்மாக்களில் ஓர் அழியாத ஆன்மீக முத்திரையைப் பதிக்கிறது (கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி எண் 1272 மற்றும் 1274) இந்த முத்திரை நம்மை கிறிஸ்துவுடன் இணைக்கிறது மற்றும் அவருக்கும் அவரது திருஅவைக்கும் நாம் நிரந்தரமாகச் சொந்தமானவர்கள் என்பதைக் குறிக்கிறது. மரணத்தால் கூட அதை இழக்கவோ அகற்றவோ முடியாது என்பதை நினைவில் கொள்வோம்.

- ஆர்.கே.சாமி, சிரம்பான்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.